**O.S.No.32/2019**

<u>வா.சா.1, திரு.ஆபிரகாம்தாஸ்</u>
நாள் : 31.07.2025 நேரம் : 12.33 PM

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>**

தாவா வழக்கு சொத்தில் என்ன அமைப்புகள் உள்ளது என்றால் ஒரு சர்ச் மற்றும் 48 கடைகள் உள்ளன. நான் தாவா சொத்தை கடைசியாக 2017 ம் ஆண்டு தான் பார்த்தேன். தாவா வழக்கு சொத்து 4 லக்கங்களாக காட்டியுள்ளேன் என்றாலும், எதற்காக 4 லக்க சொத்தாக காட்டினேன் என்றாலும் அது எனக்கு இப்போது ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை 2 முதல் 4 வாதிகள் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான், நானும், பவர்தரார்களும், வாதிகளும் கலந்து பேசித்தான் நிரூபண வாக்குமூலத்தை தயார் செய்தோம். தாவா வழக்கு சொத்தின் சர்வே எண், நான்கு மால், விஸ்தீரணம், பட்டா எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டவர் வழக்கறிஞர் என்றால் சரிதான். நான் 1வது வாதிதரப்பு சாட்சியின் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விசயங்களை தான் நான் எனது வாக்குமூலத்திலும் அடி பிறழாமல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது தரப்பில் ஆவணங்களை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாவா வழக்கு சொத்தில் உள்ள 48 கடைகளை சொத்து விபரத்தில் காட்டவில்லை என்பதாலும், வாடகைதாரர்களை வழக்கின் கட்சிக்காரர்களாக சேர்க்காததாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் முதுகுளத்தூர் டவுன் எல்லைக்குட்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்துகளுக்குரிய ஆவணங்கள் தான் 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கிடையே ஏற்பட்ட வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் மதிப்பு 5 கோடி இருக்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்களின் மதிப்பு 1

கோடியே 60 லட்சத்து 62 ஆயிரம் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து பதிவு கிரைய ஆவணம் 2 முதல் 6 பிரதிவாதிகளின் பெயரில் உள்ளதாலும் விளம்புகை பரிகாரம் கோராததாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து பதிவு கிரைய ஆவணம் 2 முதல் 6 பிரதிவாதிகளின் பெயரில் ஏற்பட்டவுடன் அந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் பத்திரம் போட்டு 2 மாதத்திற்கு பின் தெரியும். மேற்படி ஆவணங்கள் செல்லத்தக்கது அல்ல என நான் கோரியுள்ள பரிகாரம் காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல, நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று அங்கு நீதிமன்றத்தில் பரிகாரம் கோரி கொள்ளுங்கள் என கூறியதற்கு பின்னர் தான் நீதிமன்றத்தை அணுகி வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் சென்றதற்கு ஆவணங்கள் எதுவும் என்னிடம் உள்ளதா என்றால் ஆவணங்கள் எதுவும் கொடுக்கவில்லை, வாய்மொழியாக தான் கூறினார்கள். நான் மேற்படி சார்பதிவளார் அலுவலகத்திற்கு சென்றதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் உள்ள கடைகளை முன்னர் டிஎல்சி நிறுவனமும் தற்போது 2 முதல் 6 பிரதிவாதிகள் தான் வாடகைக்கு விடுகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, டிஎல்சி நிறுவனம் தான் தாவா சொத்தில் உள்ள கடைகளை வாடகைக்கு கொடுத்துள்ளது 2 முதல் 6 பிரதிவாதிகள் தாவா சொத்தில் உள்ள கடைகளை வாடகைக்கு கொடுக்கவில்லை. மேற்படி 1ம் வாதி தாவா சொத்தில் உள்ள கடைகளை வாடகைதாரர்களுக்கு கொடுத்ததது, வாடகை வாங்கியது சம்மந்தமாக ஏதேனும் எழுத்து மூலமான ஆவணங்கள் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது, நான் 4.7.2015 ல் தான் தலைவராக பொறுப்பேற்றேன். நான் பணி செய்த காலத்தில் மேற்படி ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. தாவா சொத்தை பொறுத்து மூல ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பிறகு 1ம் வாதி பெயரில் வா.சா.ஆ.9, வா.சா.ஆ.11 முதல் வா.சா.ஆ.14

வரையிலான வருவாய் ஆவணங்கள் உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1ம் வாதியின் அனுபவத்தில் இல்லை என்றாலும், வாடகைதாரர்களின் அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும் சரிதான். நான் எனது 1ம் வாதியின் அனுபவத்தை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.12 ஆவணம் கொடைக்கானலில் உள்ள சொத்துக்களை பொறுத்து நடைபெற்றது என்றாலும், முதுகுளத்தூரில் உள்ள இந்த வழக்கு சொத்துக்களை பொறுத்து நடைபெறவில்லை என்றாலும் சரிதான். மேலும் நான் வா.சா.ஆ.12 ஆவணமான தீர்ப்புரையை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், தீர்ப்பாணையை தாக்கல் செய்தால் உண்மை விவரம் தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.15 ஆவணம் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து ஆஜராவதற்கான அழைப்பாணை என்றால் சரிதான். வா.சா.ஆ.15 நடவடிக்கையில் ஏற்பட்ட உத்தரவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி உத்தரவை எதிர்த்து 2 முதல் 6 பிரதிவாதிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேற்படி மாவட்ட பதிவாளர் மற்றும் இவ்வழக்கின் 1ம் வாதி, 1ம் பிரதிவாதியின் மீது WP(MD)NO.15050/2015 என்ற நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் 1ம் வாதியும், 1ம் பிரதிவாதியும் ஆஜராகி வழக்கு நடத்தினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாவட்ட பதிவாளர் வழங்கிய உத்தரவை ரத்து செய்து 9.1.2023ம் தேதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 ஆவணங்களின் அடிப்படையில் 2 முதல் 6 பிரதிவாதிகள் தான் தாவா சொத்தை பாத்தியம் அடைந்து வாடகைக்கு விட்டு வாடகைதாரர்களிடம் வாடகை பெற்று அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் 1ம் வாதிக்கு பாத்தியமோ, அனுபவமோ இல்லை என்றால்

சரியல்ல. 1ம் வாதி தனக்கு பாத்தியம் இல்லாத தாவா சொத்துக்களை பொறுத்து 2 முதல் 4 வாதிகளுக்கு பொது அதிகார பத்திரமான வா.சா.ஆ.11 ஆவணத்தை மோசடியாக எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 2 முதல் 6 பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிக்கும் எண்ணத்துடன் மோசடியாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 01.15 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.07.31 15:48:21 +0530